# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 6148/F/2024**

திரு.S.கார்த்திகேயன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),
துணைப்பதிவாளர்
(வீட்டுவசதி) அலுவலகம்,
திநகர் கூட்டுறவு கட்டிட சங்கம், .. பொது அதிகார அமைப்பு
18 ராமநாதன் தெரு,
முதல் மாடி தியாகராயநகர்,
சென்னை-17.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.S.கார்த்திகேயன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திருமதி.ஜீ.சீ.இலட்சுமி, கூட்டுறவு சார்பதிவாளர், துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம், திநகர், சென்னை அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 13/12/2023 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் Video taken on 04/08/2010 by VSNL society at General Body meeting. Video taken on 14.08.2010 by VSNL society at General Body meeting and Video taken on 30.10.2021 by VSNL society at General Body Meeting want above video copy என்பன போன்ற தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை. மனுதாரர் தனக்கு தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 18.01.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 20.02.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 13.05.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து மேல்முறையீட்டு அலுவலர் 20.02.2024 தேதியிட்ட கடிதத்தின் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனு தங்களது பொது அதிகார அமைப்பில் வரப்பெறவில்லை எனவும் அதற்கான மேல்முறையீட்டு மனு மட்டுமே பெறப்பட்டுள்ளதாகவும் கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு சரியான தகவல் கிடைக்கவில்லை என்றும் சரியான தகவலை பெற்று தருமாறு கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் ஏற்புடையது அல்ல எனக் கருதி இவ்வாணையம் கீழ்கண்ட உத்தரவினை பிறப்பிக்கிறது.

- **மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவல்களுக்கு தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் உரிய பொது அதிகார அமைப்பிடமிருந்து தகவலைப் பெற்று மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவல் ஆகியவற்றை இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் 18.06.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 6148/F/2024**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுதகவல் அலுவலர்,
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம்,
திநகர் கூட்டுறவு கட்டிட சங்கம்,
18 ராமநாதன் தெரு,
முதல் மாடி தியாகராயநகர்,
சென்னை-17.

**மேல்முறையீட்டாளர்:-**

திரு.கார்த்திகேயன்,
எண்.9, சுபவ் அபார்ட்மெண்ட்ஸ்,
29/16 மாங்காடு சாமி தெரு,
நுங்கம்பாக்கம்,
சென்னை-34.

Copy to file: KR/PA